# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

# Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2018

ஆண்டு: 5 திகதி: 23.06.2018

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்: திருமதி செ. சிவசுப்பிரமணியம்

மாணவர் பெயர்: ---------------------------------------------------

| வினாக்கள் | புள்ளிகள் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 5 | |
| வினா 6 | 20 | |
| வினா 7 | 20 | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 25 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

I. பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்கனுக்கு விடை தருக.

## <u>தந்தையும் தாயும் எமக்கு செய்யும் நன்மைகள்</u>

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"
"தாயிந் சிறந்தொரு கோயிலும் இல்லை"
"தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"

இவ்வாறு அம்மாவையும் அப்பாவையும் சிறப்பித்துக் கூறுகிறார்கள் இவ்வாறு கூறுவதற்கு காரணம் இருக்கவேண்டும் அல்லவா?

தாய் எம்மை பத்து மாதம் சுமந்து, பல துன்பங்களை அனுபவித்து பெற்றெடுக்கிறாள். பின் எம்மை பால் ஊட்டி வளர்கிறாள், எமக்கு நோய் வராமல் பாதுகாக்கிறாள். நாம் சிரிக்கும் போது தானும் சிரிப்பாள், நாம் அழுதால் அவளும் அழுவாள். சோறு ஊட்டும் போது அன்பையும் ஊட்டுகிறாள். நல்ல பழக்கங்களை எம் மனதில் பதியச்செய்கிறாள். இவற்றைத் தனக்காகவா செய்கிறாள்? எமது நன்மைக்காகத்தானே செய்கிறாள்.

தந்தை எமது நன்மைக்காக பாடுபட்டு உழைக்கிறார். வேண்டிய பொருட்களை வேண்டிய நேரத்தில் வாங்கித்தருகிறார். எம்மை பாடசாலையில் சேர்த்து கல்வி கற்பித்து அறிஞனாக்க எண்ணுகிறார். நாம் தவறு செய்யும் போது கண்டிப்பார் பின் எம்மீது அன்பு காட்டுவார். பல பெரியார்களின் கதைகளைக் கூறி புத்திமதி கூறுவார். சோம்பேறியாக இருக்கக்கூடாது என்று விளையாட்டுப் பயிற்சி தருவார். பல இடங்களை எமக்கு சுற்றிக் காட்டி விளக்குவார். அவர் செய்வன எல்லாம் எமது நன்மைக்கே.

தந்தையும் தாயும் எமக்கு செய்யும் உதவிகள் பல அவற்றை நாம் மனதில் இருத்தி அவர்களைத் தெய்வங்களாக வழிபடவேண்டும்.

கீறிட்ட இடத்தை நிரப்புக.

i. அன்னையும் பிதாவும் ____________________ ____________________

தந்தை சொல் மிக்க ____________________ ____________________

(4 புள்ளிகள்)

ii. எமது தாய் எமக்கு செய்யும் நன்மைகள் மூன்று எழுதுக.

_______________

_______________

_______________

(6 புள்ளிகள்)

iii. நாம் அழும்போது தானும் அழுபவள் யார்?

_______________________________________________

(2 புள்ளிகள்)

iv. தந்தை எமக்கு செய்யும் நன்மைகள் மூன்று எழுதுக.

_______________

_______________

_______________

(6 புள்ளிகள்)

v. எமது தாய் தந்தையை எப்படி நாம் வழிபடவேண்டும்?

_______________________________________________

(2 புள்ளிகள்)

vi. ஒத்த சொல் இரண்டு தருக

தந்தை _______________ _______________

தாய் _______________ _______________

(4 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

2.1 பன்மையில் மாற்றி எழுதுக
உதாரணம் பூ என்பது பூக்கள்

i. ஆலயம் ____________________

ii. சிற்பம் ____________________

iii. சிறுவன் ____________________

iv. மரம் ____________________

v. மேசை ____________________

(5 புள்ளிகள்)

2.2 கீழே உள்ள சொற்களுக்கு எதிர்ச்சொற்கள் தருக.

i. இரவு ____________________

ii. நீதி ____________________

iii. ஏற்றம் ____________________

iv. இளமை ____________________

v. நம்பிக்கை ____________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

3.1 பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

i. குறிப்புப்புத்தகம் ______________ + ______________

ii. தகவற்சாதனம் ______________ + ______________

iii. வந்துபார்த்தான் ______________ + ______________

iv. நுழைவுச்சீட்டு ______________ + ______________

v. கருங்கல் ______________ + ______________

(5 புள்ளிகள்)

3.2 தரப்பட்ட சொற்களை சரியான வடிவத்தில் பயன்படுத்துக.

உதாரணம்:- நாங்கள் ……………….. கடிதம் எழுதினோம் (தமிழ்)

நாங்கள் ***தமிழில்*** கடிதம் எழுதினோம்

i. ஔவையார் பல ______________ எழுதினார். (நூல்)

ii. அண்ணா ____________________ முதற் பரிசு பெற்றான். (பேச்சுப்போட்டி)

iii. கண்ணன் ______________ எறிந்தான். (பந்து)

iv. வாணி ______________ எடுத்து வைத்தாள். (தட்டு)

v. மகன் ______________ தசரதன் இறந்தான். (பிரிவு)

(5 புள்ளிகள்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

4.1 அடைப்புக்குறிகுள் உள்ள சொற்களில் சரியான சொல்லைத்தெரிந்து அடிக்கோடிடுக.

i. (உன் / உண்) பெயர் என்ன?

ii. (என் / எண்) பெயர் வாணி.

iii. சிங்கம் முயலைக் கொன்று (உன்டது / உண்டது)

iv. மக்கள் நாடகத்தை கண்டு (கழித்தனர் / களித்தனர்)

v. (வானம் / வாணம்) நீலநிறமானது.

(5 புள்ளிகள்)

4.2 பின்வரும் வாக்கியங்களில் "வா" என்ற சொல்லை பொருத்தமான காலதிற்கு மாற்றி எழுதவும்.

உதாரணம்:- மாமா நாளை வருவார்.

i. நான் நேற்று ________________

ii. கண்ணன் நேற்று ________________

iii. வாணி நாளை ________________

iv. அண்ணா இன்று ________________

v. மாமாவும் மாமியும் நாளை ________________

(5 புள்ளிகள்)

| வினா இல | 5 | புள்ளிகள் | 5 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

5. இந்தப்படத்தையும் பாடலையும் பார்த்து வாசித்து 5 வசனங்கள் எழுதுக.

(5 புள்ளிகள்)




________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

6. உமது நண்பருக்கு உமது பிறந்தநாள் விழாவிற்கு வரும்படி அழைப்பு விடுத்து கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)

இவ்விழாவிற்கு எப்போது? எங்கே? என்ன நேரம்? எப்படிக் கொண்டாடப்படும்? என்பது பற்றிக் குறிப்பிடப்படவேண்டும்.

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 11 |
|---|---|---|---|---|---|

7. கட்டுரை எழுதுதல்

பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிந்து 15 வசனங்கள் எழுதுக.

i. தமிழர் கொண்டாடுகின்ற பண்டிகை ஒன்று.

ii. தமிழ் வளர்த்த பெரியார் ஒருவர்.